தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 16-12-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தேசிய அளவிலான வாசனை மற்றும் மணமூட்டும் பயிர்களின் கருத்தரங்கு (SYMSAC-VIII)-2015

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை மற்றும் இந்திய வாசனைப்பயிர்கள் கூட்டமைப்பு (ISS), இணைந்து நடத்தும் ''நீட்டிக்கக்கூடிய வாசனைப்பயிர்கள் உற்பத்தி உத்திகள் - 2050 – ஐ நோக்கி'' என்ற மையக்கருத்துடன் கூடிய தேசிய அளவிலான வாசனை மற்றும் மணமூட்டும் பயிர்களின் கருத்தரங்கின் (SYMSAC-VIII) துவக்க விழா 2015, இன்று (16-12-2015) வேளாண் பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்றது.

இக்கருத்தரங்கினை புதுடெல்லி இந்திய வேளாண் ஆராய்ச்சி கழக DDG (Hort.Science) முனைவர். என்.கே. கிருஷ்ணகுமார் அவர்கள் தனது துவக்க உரையில், இந்திய வாசனைப்பயிர்களில் உள்ள அதிக நுண்ணுயிர்கள் மற்றும் மைக்கொடாக்ஸின் அளவுகளால் உலக சந்தையில் முக்கியப் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டினார். எனவே, சுத்தமான வாசனைப் பொருட்களை முறையான அறுவடை பின்சார் நேர்த்திகள் மூலமாகவும் சேமிப்பு முறைகளையும் ஒருங்கே கடைபிடித்து வாசனை மற்றும் மணமூட்டும் பயிர்கள் உற்பத்தியில் ஏற்றம் பெற வேண்டும் என்பதை வலியுறுத்தினார்.

முனைவர். கே. இராமசாமி, துணைவேந்தர், தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை தனது தலைமை உரையில், மாறி வரும் மாற்று மருத்துவ முறைகளுக்கேற்ற சரியான அறுவடை பருவம் மற்றும் முதிர்ச்சி குறியீடுகளில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்பதை வலியுறுத்தினார். மேலும் துணைவேந்தர் அவர்கள் கருத்தரங்கில் பங்கேற்ற ஆராய்ச்சியாளர்கள் குழுவிடம், நீட்டிக்கக்கூடிய வாசனைப்பயிர்கள் உற்பத்தி உத்திகள் தொடர்பான சீரிய ஆராய்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

பேராசிரியர் ஆர். ஆர். ஹன்சிலால், தலைவர், Protection of Plant Varieties and Farmers Rights Authorities (PPV&FRA), புதுடெல்லி, அவரது முக்கிய உரையில் மலபார் மிளகு, ஆலப்புழா பச்சை ஏலக்காய், கூர்க் பச்சை ஏலக்காய், நாகா மிளகாய் மற்றும் ஈரோடு மஞ்சள் ஆகியவை புவியியல் குறியீடுகள் பெற்றிருப்பதாகக் குறிப்பிட்டார். PPV&FRA மூலம் பயிர் இரகங்களை பதிவு செய்வதில் வேளாண் ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் விவசாயிகளின் பங்கு மேலோங்கி இருக்க வேண்டுமென்று கூறினார். மேலும், பயிர் இரகங்களை காப்பதில் தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் முக்கிய பங்களிப்பினையும் பாராட்டினார்.

முனைவர். எம். ஆனந்தராஜ், இயக்குநர், IISR, கோழிக்கோடு, முனைவர். வி.ஏ. பார்த்தசாரதி, முன்னாள் இயக்குநர், IISR, கோழிக்கோடு, முனைவர். ஜிதேந்திர குமார், இயக்குநர், ICAR-DMAPR, ஆனந்த், குஜராத், முனைவர். சே. மாரியப்பன், முதல்வர் (தோட்டக்கலை), தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கோயமுத்தூர் மற்றும் முனைவர் ஹோமி செரியன், DASD, கோழிக்கோடு ஆகியயோர் கருத்தரங்கில் பங்கேற்று தங்கள் வழிகாட்டுதல்களை வழங்கி கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளர்களின் சீரிய உழைப்பையும் தன்முனைப்பையும் வியந்து பாராட்டினாாகள்.

இதனைத் தொடர்ந்து, ISS விருது வழங்கும் விழா நடைபெற்றது அதில், வாசனைப்பயிர்கள் ஆராய்ச்சியில் நிகரில்லாப் பங்களிப்பு நல்கிய சிறந்த ஆராய்ச்சியாளர்களுக்கு சுகந்த பாரதி விருதும், தொழில்நுட்ப மேம்பாடு, காப்புரிமை பதிவு, ஆராய்ச்சி பதிப்புகள் மற்றும் மற்றும் இதர செயல்பாடுகளில் திறம்பட செயலாற்றிய ஆராய்ச்சியாளர்களுக்கு ISS Fellowships வழங்கப்பட்டது. மேலும் வாசனைப்யிர்கள் பயிரிடுவதில் குறிப்பிடத்தக்க பங்காற்றிய விவசாயிகளுக்கு சுகந்த ஸ்ரீ புதுமை விவசாயி விருது, சிறந்த முனைவர் தகுதிக்கான ஆராய்ச்சி பதிவுரைக்கு முனைவர். வி.எஸ். கோரிகாந்திமாத் விருது, சிறந்த முதுகலைத் தகுதிக்கான ஆராய்ச்சி பதிவுரைக்கு் ஸ்ரீமதி. விஜயா கோரிகாந்த் மாத் விருது மற்றும் சிறந்த ஆராய்ச்சி வெளியீடுக்கான முனைவர். ஜெ. எஸ் புருத்தி விருது ஆகியவை வழங்கப்பட்டன.

இத்தருணத்தில் கருத்தரங்கின் souvenir மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் நிலவேம்பு பொடி வெளியிடப்பட்டது.

முன்னதாக கோழிக்கோடு இந்திய வாசனைப்பயிர்கள் கூட்டமைப்புதலைவர் முனைவர். கே. நிர்மல்பாபு அவர்கள் வரவேற்புரையாற்றினார். இறுதியாக, வேளாண் பல்கலைக்கழக வாசனை மற்றும் மலைத்தோட்டப்பயிர்கள் துறையின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர். ஜெ. சுரேஷ் அவர்கள் நன்றியுரை நல்கினார்.

பின்னர் துவக்க விழாவைத் தொடர்ந்து சிறப்புரையும் பொருட்காட்சியின் துவக்கவிழா நிகழ்ச்சியும் நடைபெற்றன.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்